RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 238 | ஆகஸ்டு.30 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## அமெரிக்க வரிவிதிப்பால் ஏற்படும் பாதிப்பை தடுக்க உடனடி நிவாரணம் தேவை

### முதல்வர் ஸ்டாலின் மீண்டும் வலியுறுத்தல்

சென்னை : ஆக.30-

அமெரிக்காவின் வரிவிதிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கருத்தில் கொண்டு, உடனடி நிவாரணம் மற்றும் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மூலம் தொழிற்சாலைகள், பணியாளர்களை காக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை முதல்வர் ஸ்டாலின் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படும் என்ற அமெரிக்காவின் அறிவிப்பு, நேற்று (ஆக.28) அதிகாலை முதல் அமலுக்கு வந்துள்ளது. இதனால், நாடு முழுவதும் தொழில் துறை கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது. ஜவுளித் தொழிலின் முக்கிய அங்கமாக இருக்கும் திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது.

திருப்பூரில் ஏற்றுமதி சார்ந்த பின்னலாடை நிறுவனங்கள் அதிகம் உள்ளன. ஆண்டின் மொத்த ஏற்றுமதியில் 30 சதவீதம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதாவது அமெரிக்காவுக்கு ஆண்டுக்கு 4 முறை, ஏற்றுமதி வர்த்தகம் சுழற்சி அடிப்படையில் நடைபெறுகிறது. ஒவ்வொரு 120 நாட்களுக்கும் ஒருமுறை சுழற்சி அடிப்படையில் ஆர்டர் பெறுவது, அனுப்பி வைப்பது என ஏற்றுமதி வர்த்தகம்நடந்து வருகிறது. அதன்படி திருப்பூரில் தற்போது அமெரிக்காவுக்கு




அனுப்ப வேண்டிய ரூ.3,000 கோடி மதிப்பிலான வர்த்தகம் தேக்கம் அடைந்து பாதிப்புகளை சந்தித்துள்ளது.

இதுகுறித்து திருப்பூர் ஏற்றுமதி தொழில் துறையினர் கூறும்போது, “இந்தியா மீது அமெரிக்கா வர்த்தகப் போர் தொடுத்துள்ளது போன்ற சூழல் நிலவுகிறது. பின்னலாடை ஏற்றுமதி நிறுவனங்கள் ஆர்டர்களை இழக்கும்போது, இயல்பாகவே தொழிலாளர்கள் வேலையை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது’’ என்றனர். இதற்கிடையே, அமெரிக்காவின்வரி விதிப்பு நடவடிக்கையை கருத்தில் கொண்டு, வர்த்தகத்தை மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு, முதல்வர் ஸ்டாலின் கடந்த 16ம் தேதி கடிதம் எழுதினார்.

அமெரிக்காவின் வரிவிதிப்பால், ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோமொபைல், நகைகள்ரத்தினக்கற்கள், தோல், காலணிகள், கடல்பொருட்கள், ரசாயனங்கள் துறைகளில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, உடனடி நிவாரணம் வழங்கி, பணப் புழக்கத்தை மேம்படுத்தவும், செலவுச் சுமைகளைக் குறைக்கவும் சுங்க வரிகளால் பாதிக்கப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் சிறப்பு வட்டி மானியத் திட்டம் அறிமுகம், அதிக சுங்க வரி சந்தை அபாயங்களை ஈடுகட்ட, தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAக்கள்) மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களை விரைவுபடுத்துதல் ஆகியவற்றை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு முதல்வர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அந்த கடிதத்தை சுட்டிக்காட்டி முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட சமூக வலைதள பதிவில் கூறியுள்ளதாவது: அமெரிக்காவின் 50 சதவீத வரிவிதிப்பு நடவடிக்கை, தமிழகத்தின், குறிப்பாக பின்னலாடை மையமான திருப்பூரின் ஏற்றுமதி வர்த்தகத்தை பெரிதும் பாதித்துள்ளது. ஆண்டுக்கு ரூ.3,000 கோடி வர்த்தகம் பாதிக்கப்படுவதோடு, பல்லாயிரக்கணக்கானோரின் வேலைவாய்ப்பும் பாதிப்படைந்துள்ளது.

இந்த சூழலில், மத்திய அரசிடம் முன்வைத்த கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்துகிறேன். உடனடி நிவாரணம் மற்றும் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மூலம் நமது தொழிற்சாலைகள் மற்றும் பணியாளர்களை காக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

சென்செக்ஸ் 706 புள்ளிகள் சரிவு: அமெரிக்காவில் இறக்குமதியாகும் இந்திய பொருட்களுக்கான 25% வரி இந்த மாத தொடக்கத்தில் அமலுக்கு வந்தது. இதையடுத்து, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தாவிட்டால் ஆகஸ்ட் 27ம் தேதி முதல் கூடுதலாக 25% வரி விதிக்கப்படும் என அதிபர் ட்ரம்ப் கூறியிருந்தார். இதன்படி, கூடுதல் வரி விதிப்பும் அமலுக்கு வந்துள்ளது. இதன் எதிரொலியாக இந்திய பங்குச் சந்தைகள் கடந்த 26ம் தேதி 1% அளவுக்கு சரிந்தது. 2வதுநாளாக நேற்றும் பங்குச் சந்தையில் சரிவு நீடித்தது. நேற்றைய வர்த்தக முடிவில் மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் ‘சென்செக்ஸ்’ 706 புள்ளிகள் சரிந்து 80,080 புள்ளிகளில் நிலை பெற்றது. தேசிய பங்குச் சந்தை குறியீட்டெண் ‘நிப்டி’ 211 புள்ளிகள் சரிந்து 24,501ல் நிலை பெற்றது.

## செப்.10 முதல் காலாண்டுத் தேர்வு: பள்ளிக் கல்வித் துறை அட்டவணை வெளியீடு

சென்னை, ஆக.30-

பள்ளி மாணவர்களுக்கான காலாண்டுத் தேர்வு செப்டம்பர் 10ம் தேதி தொடங்கும் என்று பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.



இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு வருமாறு: தமிழகத்தில் பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தைப் பின்பற்றும் அனைத்து விதமான பள்ளிகளிலும் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான காலாண்டுத் தேர்வு செப்டம்பர் 10 முதல் 26ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது.

இதில் 11, 12ம் வகுப்பு மாணவர்களுக்கு செப்.10ல் தொடங்கி 25ம் தேதி வரை நடைபெறும். மேலும், 6 முதல் 10ம் வகுப்புகளுக்கான தேர்வுகள் செப்டம்பர் 15ல் தொடங்கி 26ம் தேதி வரை நடத்தப்படும். இதற்குரிய கால அட்டவணை பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 10, 12ம் வகுப்புக்கு காலையிலும், 11ம் வகுப்புக்கு மதியமும் தேர்வுகள் நடைபெறும்.

6, 8ம் வகுப்புக்கு காலையிலும், 7, 9ம் வகுப்புக்கு மதியமும் தேர்வு நடத்தப்படும். இதைத் தொடர்ந்து 6 முதல் 12ம் வகுப்புக்கு செப். 27 முதல் அக்.5 வரை விடுமுறை வழங்கப்படும். இந்த விடுப்பு முடிந்து பள்ளிகள் மீண்டும் அக்டோபர் 6ம் தேதி திறக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## சென்னையில் 64 பெண் தெய்வங்களின் ஓவியக் கண்காட்சி தொடக்கம்

சென்னை, ஆக.30-

கண்காளி அறக்கட்டளை சார்பில் 64 பெண் தெய்வங்களின் ஓவியக் கண்காட்சி சென்னையில் நேற்று தொடங்கி செப். 1ம் தேதி வரை 5 நாட்கள் நடைபெறுகிறது.

கண்காளி அறக்கட்டளை சார்பில் ‘ஏகா தி ஒன்’ என்ற தலைப்பில், ‘பெண்களை மேம்படுத்தினால் மனிதநேயம் மேம்படும்’ எனும் கருப் பொருளுடன் 64 யோகினிகளின் (பெண் தெய்வங்கள்) ஓவியக் கண்காட்சி சென்னை ஆழ்வார்ப்பேட்டை, எல்டாம்ஸ் சாலையில் உள்ள ‘மை பங்களா’ வில் நேற்று தொடங்கியது. இந்த நிகழ்ச்சிக்கு, கண்காளி அறக்கட்டளை தலைவர் எஸ்.பீனா உன்னிகிருஷ்ணன் தலைமை தாங்கினார். 5 நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில், சாரதா மடத்தின் துறவி மாதாஜி பிரவ்ராஜிகா தர்மாத்மா ப்ரானா, பல்வேறு துறைகளை சேர்ந்த பெண் தொழில் முனைவோர், பள்ளி, கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கண்காட்சியில், பீனா உன்னி கிருஷ்ணன் வரைந்த தாரா, நர்மதா, யமுனா, சாந்தி, வருணி, ஷேம்காரி, ஐந்த்ரி, வாராஹி, ரன் வீரா உள்ளிட்ட 64 யோகினிகளின் ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த 64 யோகினிகளின் ஓவியங்களை பெண் தொழில் முனைவோர், மாணவர்கள் கண்டு ரசித்தனர்.

இது குறித்து, பீனா உன்னி கிருஷ்ணன் கூறியதாவது: உலகில் சக்தி வாய்ந்த பெண் ஆற்றலை பிரதிபலிக்கும் தெய்வீக உருவங்கள் 64 யோகினிகள் ஆகும். இந்த யோகினிகள் தைரியம், அறிவு, படைப்பாற்றல் மற்றும் மகிழ்ச்சி போன்ற பல்வேறு குணங்களை குறிக்கின்றன. கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள 64 யோகினிகளின் ஓவியங்களை வரையும் பணி 2015ம் ஆண்டு தொடங்கி 2020ல் நிறைவடைந்தது. தற்போது இந்த ஓவியங்களை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தி வருகிறோம்.

அந்த வகையில், பெண் சக்தியை முதன்மைப்படுத்தி, அதனை கொண்டாடும் விதமாக இந்த கண்காட்சி சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த கண்காட்சி மூலம் ஆணும், பெண்ணும் சமம் என்ற கருத்தையும் முன் வைத்துள்ளோம். செப். 1ம் தேதி வரை 5 நாட்கள் சென்னையில் நடைபெறும் இந்த கண்காட்சியில் பல்வேறு துறையைச் சேர்ந்த பெண் ஆளுமைகள், திரைப் பிரபலங்கள், ஆன்மிக சொற்பொழிவாளர்கள் பலர் பங்கேற்கின்றனர். தொடர்ந்து, மத்திய பிரதேசம், ஒடிசா உட்பட 15 மாநிலங்களில் கண்காட்சி நடத்த திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.



■ நீலகிரி மாவட்டம், கீழ்குந்தா பேரூராட்சி மற்றும் வெலிங்டன் கண்டோன்மெண்ட் பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்களை தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் சென்று பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

## 4 முறை அழைத்தும் பேச மறுத்த பிரதமர் மோடி: ட்ரம்ப் கடும் பதற்றமாகி இருப்பதாக தகவல்

புதுடெல்லி, ஆக.30-

வர்த்தக வரி தொடர்பாக பேச அமெரிக்க அதிபர் 4 முறை தொலைபேசியில் அழைத்தும் பிரதமர் மோடி பேச மறுத்ததாக ஜெர்மனி, ஜப்பான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுஉள்ளன.



உலக நாடுகளுக்கு அதிக வரி விதித்து வரும் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், இந்தியாவுக்கு 25 சதவீத வரியை விதித்தார். அத்துடன், உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால், கூடுதலாக 25 சதவீத வரியை ட்ரம்ப் அறிவித்தார். அதன்படி, இந்தியாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மொத்தமாக 50 சதவீத வரி விதிக்கப்பட்டது. இந்த வரி விதிப்பு கடந்த 27ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

ஆனால், வர்த்தக வரி விதிப்பு தொடர்பாக அமெரிக்காவின் நிர்பந்தத்துக்கு அடிபணிய மாட்டோம். எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் இந்திய விவசாயிகள், சிறு வணிகர்களை பாதிக்கவிட மாட்டேன் என்று பிரதமர் மோடி திட்டவட்டமாக கூறி விட்டார். அமெரிக்காவின் வரி விதிப்பால் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும். அதை சரிகட்ட பல்வேறு திட்டங்களை மத்திய அரசு எடுத்து வருகிறது.

இந்நிலையில் வரி தொடர்பாக பிரதமர் மோடியிடம் பேச்சுவார்த்தை நடத்த கடந்த சில வாரங்களில் அதிபர் ட்ரம்ப் 4 முறை தொலைபேசியில் அழைத்ததாகவும் பிரதமர் மோடி பேச மறுத்துவிட்டதாகவும் ஜெர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் இருந்து இருந்து வெளிவரும் பிரபல ‘அல்லெஜிமெய்ன் ஜெய்டங்’ என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதேபோல், ட்ரம்பிடம் பேச மோடி மறுத்துவிட்டதாக ஜப்பானில் இருந்து வெளிவரும் ‘நிக்கீ ஏசியா’ பத்திரிகையும் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த தகவலை உறுதிப்படுத்த அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அதிகாரிகள் மறுத்துவிட்டனர். அதே நேரத்தில் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகளை மறுக்கவும் இல்லை. இதுகுறித்து இந்தியாவின் முக்கிய தூதரக அதிகாரி ஒருவர் கூறும்போது, “முக்கிய விவகாரங்களில் தொலைபேசியில் பேசுவது பிரதமர் மோடியின் பாணி இல்லை’’ என்றார். மத்திய அரசு வட்டாரங்கள் கூறும்போது, “ட்ரம்பிடம் பேசினால், ஊகங்களின் அடிப்படையில் தகவல்கள் திரித்து வெளியிடப்படுகின்றன. அதை தவிர்க்க ட்ரம்பிடம் பிரதமர் மோடி பேசுவதை தவிர்த்திருக்கலாம். ஏனெனில், இந்தியா பாகிஸ்தான் போரின் போது ட்ரம்ப் கூறிய கருத்துகளை மனதில் வைத்து அவரது தொலைபேசி அழைப்பை தவிர்த்திருக்கலாம்’’ என்றனர்.

ஆபரேஷன் சிந்தூரின் போது, இந்திய பாகிஸ்தான் இடையே அணுஆயுத போராக மாறுவதாக இருந்தது. அதை நான்தான் தடுத்தேன் என்று ட்ரம்ப் கூறி வருகிறார். அத்துடன், சர்வதேச அளவில் 7 போர்களை நிறுத்தி இருக்கிறேன் என்றும் ட்ரம்ப் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கூறினார். இந்நிலையில், இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக வரி தொடர்பாக மோதல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பிரதமர் மோடி பேச மறுத்துள்ளதால், அதிபர் ட்ரம்ப் கடும் பதற்றமாகி இருப்பதாக கூறப்படுகிறது.

சீன அதிபர் ஜி ஜின்பிங் ரகசிய கடிதம்: சீன அதிபர் ஜி ஜின்பிங் இந்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு அண்மையில் ரகசிய கடிதத்தை அனுப்பினார். அந்த கடிதத்தில் அமெரிக்காவின் வரி விதிப்பு போரை, இந்தியாவும் சீனாவும் இணைந்து முறியடிப்பது தொடர்பான ஆலோசனைகளை அதிபர் ஜி ஜின்பிங் முன்மொழிந்து உள்ளார். உலகத்தின் நன்மைக்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

ரகசிய கடிதத்தை தொடர்ந்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சீனாவுக்கு சென்று அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்தார். இதைத் தொடர்ந்து சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ டெல்லிக்கு வந்து பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.

எல்லைப் பிரச்சினை காரணமாக இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுடன் சீனா மோதல் போக்கை கடைப்பிடித்து வந்தது. தற்போது தைவானை தவிர்த்து அனைத்து அண்டை நாடுகளுடனும் நட்புறவைப் பேண சீனா முடிவு செய்திருக்கிறது. இது மிகப்பெரிய திருப்பு முனையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## செப்.3 முதல் 10ம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழ் விநியோகம்

சென்னை, ஆக.30-

பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு அசல் மதிப்பெண் சான்றிதழ் செப்டம்பர் 3ம் தேதி முதல் வழங்கப்படும் என்று தேர்வுத் துறை அறிவித்துள்ளது.

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் கடந்த கல்வியாண்டுக்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவு மே 16ம் தேதி வெளி யிடப்பட்டது. தொடர்ந்து மாணவர்களுக்கான தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் மே 19ம் தேதி முதல் வழங் கப்பட்டன. எனினும், அசல் மதிப்பெண் சான்றிதழ் வழங்குவதில் சற்று தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான அசல் மதிப்பெண் சான்றிதழ் செப்டம்பர் 3ம் தேதி முதல் வழங்கப்படும் என்று தேர்வுத் துறை அறிவித்துள்ளது. இதையடுத்து பொதுத் தேர்வு எழுதிய மாணவர்கள், தாங்கள் படித்த பள்ளிகள் மூலமும், தனித்தேர்வர்கள் தங்கள் தேர்வு மையங்களிலும் அசல் மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம் என்று தேர்வுத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



குடியாத்தம் கே.எம்.ஜி கல்லூரியில் உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி

## மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்று சிறப்புரையாற்றி, கல்லூரி சேர்க்கைகாண ஆணைகளை வழங்கினார்

வேலூர், ஆக.30-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கே.எம்.ஜி. கல்லூரி கூட்டரங்கில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் சார்பில், நான் முதல்வன் திட்டத்தின்கீழ் 10ம், 12ம் வகுப்பு முடித்து இதுவரை உயர்க்கல்வியில் சேராத மாணவ, மாணவிகளுக்கு (29.08.2025) உயர்வுக்கு படி எனும் உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, கல்லூரி சேர்க்கைக்கான ஆணைகளை மாணவ, மாணவிகளிடம் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்

சசிகுமார், திறன் மேம்பாட்டு கழக உதவி இயக்குநர் காயத்ரி, உதவி திட்ட அலுவலர் ஜெகதீஸ்வரப்பிள்ளை, கே.எம்.ஜி.கல்லூரி முதல்வர் முனைவர் தண்டபானி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் மாணவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் பரமார்த்தலிங்கபுரம் நேதாஜி காலணி ஓம் சக்தி விநாயகர் திருக்கோயில் 18ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு சிறப்பு விருந்தினராக கலப்பை மக்கள் இயக்க நிறுவனத் தலைவரும் தென்குமரி கல்விக் கழகச் செயலாளருமான டாக்டர் பி.டி.செல்வகுமார். தலைமையில் அவர்களின் துணைவியார் குத்துவிளக்கு வழிபாட்டு மேம்பாட்டு குழு மாநில தலைவர் T.S.பொன்செல்வி. திருவிளக்கு பூஜையை துவக்கி வைத்தார். கலப்பை மக்கள் இயக்க தலைவர்.பி.டி. செல்வகுமார். மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கலப்பை மாவட்ட தலைவர் வக்கீல்.T.பாலகிருஷ்ணன், மகளிர் அணி அமைப்பாளர் அனிதா, அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி நான்காவது வார்டு கவுன்சிலர் ஏஞ்சலா தேவி, கோவில் நிர்வாகி குழு தலைவர் பேச்சி முத்து, வளையாபதி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




## தாம்பரம் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கில பேச்சு திறன் வகுப்புகள் ஏற்படுத்த கற்கை நன்றே இயக்கம் நிகழ்ச்சி

அஸ்தினாபுரம், ஆக.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி குரோம்பேட்டை அஸ்தினாபுரம் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் தாம்பரம் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கில பேச்சு திறன் வகுப்புகள் ஏற்படுத்த கற்கை நன்றே இயக்கம் நிகழ்ச்சி தொடங்கபட்டது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துனை மேயர் கோ. காமராஜ், ஆணையாளர் பாலசந்தர், துனை ஆணையாளர் சதிகலா, மாமன்ற உறுப்பினர்கள் மகாலட்சுமி கருணாகரன், கண்ணன், சசிகலா கார்த்திக், ரம்யா சத்யபிரபு கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி கற்கை நன்றே இயக்கத்தின் லட்சனை வெளியீடப்பட்டபட்டு மாணவர்களிடையே சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் சந்திரன், ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட மாணவ, மாணவிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

ரோகு மற்றும் மிர்கால் மீன் விரலிகளை வாங்க விரும்பும் மீன் வளர்ப்போர்,

## உள்நாட்டு மீனவர்கள் மற்றும் கண்மாய்களில் மீன் பாசி குத்தகை எடுப்போர், பிரவலூர் அரசு மீன் விதை வளர்ப்பு பண்ணையினை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.30-

சிவகங்கை மாவட்டம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள பிரவலூர் அரசு மீன்விதை வளர்ப்பு பண்ணையில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், தற்போது ரோகு மற்றும் மிர்கால் மீன்விரலிகள் கையிருப்பில் உள்ளன. எனவே, மாவட்டத்தில் உள்ள மீன் வளர்ப்போர் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் கண்மாய்களில் மீன்பாசி குத்தகை எடுப்போர் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் மீன்விரலிகளை வாங்கி பயன்பெறலாம்.

எனவே, மீன் விரலிகளை வாங்க விரும்பும் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் பிரவலூர் அரசு மீன் விதை வளர்ப்பு பண்ணை, கீழப்பூங்குடி ரோடு, ஒக்கூர் சிவகங்கை 630561 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04575 240848 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது மீன்வள ஆய்வாளர் அவர்களை 9384824553 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மதுராந்தகம் கருங்குழி தேசிய நெடுஞ்சாலையில் பிரமண்டமாக அமைக்கப்பட்டுள்ள ஆலடிப்பட்டியான் கருப்பட்டி காபி கடை மற்றும் பாரம்பரிய உணவகத்தின் திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது

மதுராந்தகம், ஆக.30-

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் கருங்குழியில் தேசிய நெடுஞ்சாலையில் ஆலடிப்பட்டியான் அல்வா மற்றும் கருப்பட்டி காபி மற்றும் உணவகத்தின் 61வது கிளை திறப்பு விழா இன்று காலை நடைபெற்றது.





ஆலடிப்பட்டியான் பாரம்பரிய சைவ உணவகத்தை கருங்குழி ஊராட்சி மன்ற தலைவர் தசரதன், see change constancy இயக்குனர் எம்.கே. ஆனந்த், எஸ்.வி. பில்டர் கே.ராம்குமார் மற்றும் வணிகர் சங்க நிர்வாகிகள், ஆலடிபட்டியான் உரிமையாளர் மோசஸ் அவர்களின் பெற்றோர் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி வைத்து விற்பனை தொடங்கி வைத்தார்.

தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் இனிப்புகளை வாடிக்கையாளர்களுக்கு சிறந்த முறையில் வழங்கி வருவதால் பொதுமக்களிடம் ஆலடிப்பட்டியான் அல்வாகடை மற்றும் கருப்பட்டி காபி, பாரம்பரிய உணவகம் ஆகியவை வரவேற்பை பெற்றுள்ளதால் அடுத்த கட்டமாக பாரம்பரிய உணவு வகைகளை நெடுந்தூரம் பயணம் செய்யும் பயணிகளின் வசதிகளுக்காக ஹைவே உணவகம் தற்போது திறக்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலையில் திறக்கப்பட்டுள்ள இந்த கிளையில் 100க்கும் மேற்பட்ட வாகனங்களை நிறுத்தும் வசதி மற்றும் கழிவறை வசதிகள் வாடிக்கையாளருக்கு செய்யப்பட்டுள்ளது. புதிய கடை திறப்பு விழாவை முன்னிட்டு முதலில் வந்த 100 பேருக்கு டிபன், கருப்படி டீ மற்றும் காபி இலவசமாக வழங்கப்பட்டன

இந்த உணவகத்தில் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் பயனுள்ள சிறுதானிய உணவுகள் தரமாகவும், சுவையாகவும் கிடைப்பதாக வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் ஆலடிப்பட்டியான் உரிமையாளர் மோசஸ், வணிகர் சங்க பேரமைப்பின் துணை தலைவர் உத்திரகுமார், மதுராந்தகம் தாசில்தார் துரை ராஜ், கருங்குழி வி.ஏ.ஒ அருண் குமார் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்





■ தேனி மாவட்டம் போடியில் இந்து முன்னணி சார்பாக 40ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் இரண்டாம் நாளாக விநாயகர் ஊர்வலம் தேவர் சிலை அருகில் இருந்து பிரதான சிலை மற்றும் அனைத்து பகுதிகளிலும் இருந்து சிலைகளுடன் மாபெரும் விஜர்ஷனம் (கரைப்பு) ஊர்வலம் 65 சிலைகளுடன் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக ஸ்ரீ வேட்டை கருப்பசாமி கோவில் கொட்டக்குடி ஆற்றில் கரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தலைமை போடிநாயக்கனூர் ஜமீன்தார் T.B.S.S.C.S.வடமலையராஜைய பாண்டியன் மற்றும் பா.ஜ.க. மாவட்ட தலைவர் ராஜபாண்டி, வினோத் குமார் பாஜக மாவட்ட பொதுச் செயலாளர், பி.சி.பாண்டியன் பாஜக முன்னாள் மாவட்ட தலைவர், உதயகுமார் RSS மாவட்ட தலைவர், சித்ராதேவி தண்டபாணி போடி பாஜக நகரத் தலைவர், கனகராஜ் முன்னாள் பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினர் மற்றும் சுப்பையா மாவட்டத் தலைவர் இந்து முன்னணி வழக்கறிஞர் பிரிவு ஆகியோர்கள் கொடியசைத்து வானவேடிக்கையுடன் மேளதாளங்கள் முழங்க ஊர்வலத்தை துவக்கி வைத்தனர். இவ்விழாவினை ஏற்பாடு செய்தவர் .கணேஷ் குமார் இந்து முன்னணி மாவட்ட செயலாளர் மற்றும் இந்து முன்னணி நகர நிர்வாகிகளும் பாஜக நகர நிர்வாகிகளும் தொண்டர்களும் பாஜக ஒன்றிய நிர்வாகிகளும் உறுப்பினர்களும் பொதுமக்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.




■ மதுரை வருவாய் கோட்டாட்சியராக கி.கருணாகரன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சென்னை கே.கே.நகரில் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு

## சாக்லேட் விநாயகர் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட விநாயகர் ஓவிய கண்காட்சிகளை நடிகை தேவயானி தொடங்கி வைத்தார்

சென்னை, ஆக.30-

சென்னை கேகே நகரில் உள்ள அச்சலம் ஆர்ட் கேலரியில் விநாயகர் சதுர்த்தி விழா வெகு சிறப்பாக இன்றை கொண்டாடப்பட்டது. விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு கலை மாணவர்களின் கைவண்ணத்தால் உருவாக்கப்பட்ட விநாயகர் ஓவியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. அதன்படி இந்த கண்காட்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நடிகை கலைமாமணி தேவயாணி கண்காட்சியை தொடங்கி வைத்து விநாயகர் ஓவியங்களை பார்வையிட்டார். இந்த கண்காட்சியில் சாக்லேட் ஆல உருவாக் கப்பட்ட விநாயகர் தங்கமூலம் பூசப்பட்ட விநாயகர் பல் பல்வேறு கலைஞர்களால்





வரையப்பட்ட ஓவியர்கள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. வாட்டர் கலர், அக்ரிலிக் பெயிண்டிங் ஆயில் பெயிண்டிங், சார்கோல், சாக்லேட் விநாயகர், களிமண் சிற்பங்கள் நூல் கொண்டு உருவாக்கப்பட்ட விநாயகர் அருகம்புல் விநாயகர் மற்றும் காய்கறி விநாயகர் ஆகியவற்றை மாணவ, மாணவியர்கள் உருவாக்கி காட்சி படுத்தி இருந்தனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 25 வது வார்டுக்குட்பட்ட மீனாட்சி கார்டன் பகுதியில் ரூ. 3.95 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்கள் சீரமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் . தொடங்கி வைத்தார். உடன் துணை மேயர் மேரி பிரின்ஸி லதா .மண்டல தலைவர் அகஸ்டினா. கோகிலவாணி .மாமன்ற உறுப்பினர் . அக்ஷய கண்ணன். செயற்குழு உறுப்பினர்.சதாசிவம். வட்ட செயலாளர் .ஜீவா. தி மு க நிர்வாகிகள் .சிவகுமார் . ஆறுமுகம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தாம்பரத்தில் “டார்லிங்” ஷோரூம் நேஷனல் தியேட்டர் எதிரில் திறப்பு விழா

தாம்பரம், ஆக.30-

சென்னை அடுத்த தாம்பரத்தில் 163 வது கிளையை டார்லிங் ஷோரூம் (ஆகஸ்ட் 27) நேஷனல் தியேட்டர் எதிரில் திறப்பு விழா பிரமாண்டமாக நடைபெற்றது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம், எம்.எல்.ஏ.,எஸ். ஆர்.ராஜா ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். விழாவில் தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, ஹோட்டல் அடையார் ஆனந்த பவன் நிறுவனர்.,ஸ்ரீனிவா ராஜா, லலித் புரோ மோட்டார்ஸ் நிறுவனர் , ஜெயராமன், ஓயாசிஸ் சைபர் நெட்டிக்ஸ், நிர்வாக இயக்குனர் இளங்கோவன், லயன்ஸ் கிளப் சர்வதேச முன்னாள் இயக்குனர் சம்பத், டார்லிங் நிறுவனத்தின் இயக்குனர்கள் : வெங்கட சுப்பு, நவராஜா முருகன், முரளி, நவீன், பாலா கிருஷ்ணன், மற்றும்






கட்டிட உரிமையாளர் சந்தானகிருஷ்ணன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றினார்கள் . முதல் விற்பனையை லைன்ஸ் முன்னாள் கவர்னர் தனபாலன் தொடங்கி வைத்தார். முக்கியமாக சோலார் தவணை முறையில் அரசு மானியத்துடன் வழங்கி வருகின்றனர் 90 சதவீதம் இதன் மூலம் மின்சார பட்டணத்தை குறைக்கலாம் என்றனர். திறப்பு விழாவை முன்னிட்டு, பெரிய டி.வி.களுக்கு ரிக்லைனர் சோபா, சைடு பை சைடு பிரிட்ஜ் களுக்கு மல்டி ஜார் மிக்ஸி, வாஷிங் மெஷின்களுக்கு ஜூஸர், செல்போன்களுக்கு லேப்டாப் பேக், ப்ளூடுத், நெட் பேங்க் கியர் பார்ட்ஸ் பவர் பேங்க் ஆகிய இலவசமாக வழங்க ப்படுகின்றன. இந்தியாவிலேயே முதன்முறையாக ஹையர் நிறுவனத்தின் 100 இன்ச் டி.வி.சாம்சங் நிறுவனத்தின் 25 கே. ஜி. வாஷிங் மெஷின் இந்த ஷோரூமில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று “டார்லிங்” நிறுவனம் அறிவித்துள்ளது. இதில் மாடுலர் கிச்சன் டிசைனிங் வாடிக்கையாளர்களுக்கு வசதி கேட்பார் போல் “டார்லிங் நிறுவனம்“ செய்து தருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளில் தமிழ்மொழி இன்றுவரை உச்சரிக்கப்படுகிறது

## மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம் கலந்துகொண்டு மாணவியர்களிடையே பேச்சு




கன்னியாகுமரி, ஆக.30-

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் துறையின் சார்பில் நாகர்கோவில் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி கலையரங்கில் மாபெரும் தமிழ்க்கனவு நிகழ்ச்சியானது நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ. பாலசுப்பிரமணியம் அவர்கள் கலந்துகொண்டு, மாணவியர்களிடையே பேசுகையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து கல்லூரி மாணவர்களிடையே தமிழர்களின் மரபையும் தமிழ்ப் பெருமிதத்தையும் உணர்த்தும் வகையில் 'மாபெரும் தமிழ்க் கனவு' என்ற பெயரிலான பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வுகளை தமிழில் புலமை பெற்ற சொற்பொழி வாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நாகர் கோவில் ஹோலிகிராஸ் மகளிர் கல்லூரியில் தமிழின் அருமை குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் மாபெரும் தமிழ்கனவு நிகழ்ச்சி இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழன் என்றோர் இனமுண்டு என்ற சொல்லுக்கு ஏற்ப குமரி மாவட்டத்தில்தான் தமிழ் வளர்த்த அறிஞர்கள் மற்றும் ஆசான்கள் வாழ்ந்ததாக பல்வேறு புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக வல்லினம், மெல்லினம், இடையினம் சேர்த்து பேசி வருவது தமிழ்நாட்டிலேயே கன்னியாகுமரி மாவட்டம் தான் என்பதில் நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் ஒற்றுமைக்காக பல்வேறு தமிழறிஞர்கள் போராடியது தமது குமரிக்கண்டம்தான். அதற்கு சான்றாக வடக்கே வடவேங்கடம் முதல் தெற்கே தென் குமரி எல்லை இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கடல் கொண்ட குமரியில் தான் இன்றயை பாலாறு மற்றும் பரளியாறு ஓடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றது.

தொல்காப்பியர், அதங் கோட்டாசான் உள்ளிட்டவர்கள் வாழ்ந்த இடம் கன்னியாகுமரி மாவட்டம். குறிப்பாக தமிழ்நாட்டிலேயே நமது கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் ஔவையாருக்கென மூன்று கோவில்கள் உள்ளது என்பது தனிச்சிறப்பாகும். இரண்டாம் தமிழ்சங்கம் குமரி கண்டத்தில்தான் நடைபெற்றது என்பதும் பல்வேறு வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும் தொல்காப்பியர் இலக்கியத்தில் தென்கட்சி நகர் அதாவது இன்றைய தேங்காய்பட்டணம் என்ற ஊரும், குறும்பனை கடற்கரை பகுதியும் இடம்பெற்றுள்ளன. எனவே மாணவியர்களாகிய நீங்கள் இதுபோன்ற பல்வேறு தகவல்கள் உலகளவில் 49 நாடுகளில் கிராம்பு உள்ளிட்ட தமிழ்மொழிகள் இன்றும் வழக்கத்தில் உள்ளது. உலகில் செழுத்தோங்கிய பண்பாடுகளில் முதன்மையானது தமிழ்பண்பாடு. தமிழர் மரபு, தமிழர் தொன்மை உள்ளிட்டவைகளை இளம் தலைமுறையினரிடையே குறிப்பாகக் கல்லூரி மாணவர்களிடையே கொண்டு செல்வதன் வாயிலாக ஆரோக்கியமான சமூக கட்டமைப்பை உருவாக்க முடியும் என்பதே தமிழ் கனவின் நோக்கமாகும். இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.பாலசுப்பிரமணியம், அவர்கள் பேசினார்கள்.

அதனைத்தொடர்ந்து மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சியில் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை சொற்பொழிவாளர் திரு.செந்தில்வேல் அவர்கள் தமிழ் மொழியின் சிறப்பு குறித்து மாணவியர்களிடையே பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் சொற்பொழிவாளர் திரு.செந்தில்வேல், நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி காளீஸ்வரி, ஹோலி கிராஸ் பெண்கள் கல்லூரி முதல்வர் அருட்சகோதரி முனைவர் சகாயமேரி, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு.கந்தசாமி, மாவட்ட நூலக அலுவலர் திருமதி.மேரி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.ஆறுமுக வெங்கடேஷ், துறை அலுவலர்கள், பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கூட்டுறவுத்துறையின் சார்பில் 10 நபர்களுக்கு மொத்தம் ரூபாய் 9.46 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வகையான கடனுதவிகளை, மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி வழங்கினார்




சிவகங்கை, ஆக.30-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில், தமிழக முதல்வர் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறு, நடைபெற்று வரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக் கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக் கப்படுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், கண்மாய்களை தூர்வாரும் பணிகள் மேற் கொள்ளவும், கண்மாய்க்கு செல்லும் ஊரணிகளை வெட்டு மராமத்து செய்திடவும், கண்மாய் பகுதிகளில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரங்களை அகற்றிடவும், இலவச மின் இணைப்புகள் வழங்கிடவும், தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும், கண்மாய் ஆக்கிரமிப்புக்களை அகற்றிடவும்,

விவசாய நிலங்களை விவசாய பணிகளுக்கென இயந்திரங்கள் வழங்கிடவும், வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், அரசு மானியத்தில் சோலார் பம்ப்செட் அமைத்திடவும், வரத்துக்கால்வாய்களை சீரமைத்திடவும், ஆழ்துளை கிணறுகள் அமைத்திடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திடவும், தேவையான சான்றிதழ்களை வழங்கிடவும், தார் சாலை வசதி அமைத்திடவும், விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும் துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொ ள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு தொகை வழங்கிடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், கடனுதவிக்குரிய மானியத்தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், விவசாயிகளுக்கான தனி அடையாள எண் வழங்கிடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, வேளாண்மை துறையின் சார்பில் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் விளக்க கையேட்டினை, மாவட்ட ஆட்சியர் வெளியிட்டார்.

மேலும், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர். பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சியர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவுத்துறையின் சார்பில் குமாரபட்டி மற்றும் பில்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 4 விவசாயிகளுக்கு மொத்தம் ரூபாய் 2,16,000/ மதிப்பீட்டிலான கால்நடை பராமரிப்பு கடனுதவிக்கான ஆணைகளையும், முத்துப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்டிக்கடை அமைப்பதற்கென தலா ரூபாய் 50,000/ வீதம் மொத்தம் ரூபாய் 1,00,000/ மதிப்பீட்டிலான தொழில் கடனுதவிக்கான ஆணைகளையும், இடையமேலூர் மற்றும் அரசனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலம் 4 விவசாயிகளுக்கு மொத்தம் ரூபாய் 6,30,100/ மதிப்பீட்டிலான பயிர்கடனுதவிக்கான ஆணைகளையும் என ஆக மொத்தம் 10 பயனாளிகளுக்கு ரூபாய் 9,46,100/ மதிப்பீட்டில் பல்வேறு வகையான கடனுதவிக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, வழங்கினார்.

முன்னதாக, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தினை முன்னிட்டு, துறை ரீதியாக அமைக்கப்பட்டிருந்த செயல் விளக்க கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) சு.சுந்தரமகாலிங்கம், மேலாண்மை இயக்குநர் (மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) உமா மகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனலெட்சுமி உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாம்

## இன்று இளையான்குடி வட்டாரத்திற்குட்பட்ட சூராணம் ஊராட்சி பகுதியிலுள்ள புனித ஜேம்ஸ் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.30-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2.8.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகம் முழுவதும் சுமார் 1,256 உயர்தர மருத்துவ மையங்கள் மூலம் 17 சிறப்பு மருத்துவ துறைகள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், வாரத்திற்கு ஒரு முகாம் வீதம் மொத்தம் 39 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், வருகின்ற 30.8.2025 ஆம் தேதியன்று இளையான்குடி வட்டாரத்திற்குட்பட்ட சூராணம் ஊராட்சி பகுதியிலுள்ள புனித ஜேம்ஸ் மேல்நிலைப்பள்ளியில் (St. James Higher Secondary School) "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமானது நடைபெறவுள்ளது. இம்மருத்துவ முகாமில், ரூபாய் 3 ஆயிரம் மதிப்பீட்டிலான இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் அனைத்தும், பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ள ப்படவுள்ளது.

மேலும், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், மனநல மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், நுரையீரல் நோய் மருத்துவம், பொது மருத்துவம், இருதய மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், தோல் மருத்துவம், சித்த மருத்துவம், இயன்முறை மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுனர்களை கொண்டு, சிறப்பான மருத்துவ சேவைகளும் இம்முகாமின் வாயிலாக வழங்கப்படவுள்ளது. மருத்துவர்களால் பரிந்துரைக்கப் படுவர்களுக்கு எக்கோ பரிசோதனை (Echocardiogram), எக்ஸ்ரே (X-Ray), அலட்ராச வுண்ட ஸ்கேன் (USG), பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் இம்முகாம்களிலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ள ப்பட்டுள்ளது. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டு, தாய் சேய் நல ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கப்படவுள்ளது. அதுமட்டுமன்றி, இம்முகாம்களின் வாயிலாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, முகாமிற்கு வருகைபுரியும் பொதுமக்கள் தங்களின் ஆதார் அட்டையின் நகலினை கொண்டு வருதல் அவசியமாகும். மேலும், இம்முகாமில் காப்பீடு அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்கள், குடும்ப அட்டை (Smart Card), ஆதார் அட்டை மற்றும் கிராம நிர்வாக அலுவல ரிடம் தங்களது ஆண்டு வருமானம் ரூபாய் 1.20 இலட்சத்துக்கு குறைவாக உள்ளத ற்கான சான்று ஆகியவைகளை கொண்டு வருதல் வேண்டும். இதுபோன்று, உயிர் காக்கும் தரமான மருத்துவ சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டமானது, செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பொதுமக்கள் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை பயன்படுத்திக் கொண்டு, தங்களது உடல்நலத்தினை முறையாக பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.





## மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு "ஜெர்மன் மொழி பயிற்சி" மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்தார்

மதுரை, ஆக.30-

மதுரை மாநகராட்சி வெள்ளி வீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மதுரை மாநகராட்சி மற்றும் பிராட்மைண்ட் நிறுவனம் இணைந்து நடத்தும் மாணவ, மாணவிகளுக்கு ஜெர்மன் மொழி பயிற்சி வகுப்பினை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்தார்.

மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 26 ஆரம்பபள்ளிகள், 14 நடுநிலைப்பள்ளிகள், 9 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப்பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. மேயர், ஆணையாளர் ஆகியோர் வழிகாட்டுதலின் கீழ் மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ. மாணவிகள் புத்தாக்கம் பெறுவதற்கு மாநகராட்சியின் சார்பில் விளையாட்டு போட்டிகள், மாவட்ட அளவில் மற்றும் மாநில நடைபெறும் பல்வேறு குறு விளையாட்டு போட்டிகள், உயர்கல்வி வழிகாட்டுதல், மற்றும் மேஜிக் ஷோ, உள்ளிட்ட பல்வேறு புத்தாக்க பயிற்சிகள் மற்றும் பசுமை நடைபயணம் மற்றும் ஐதராபாத் அறிவியல் மையம் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

மதுரை மாநகரட்சியில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளின் மொழித்திறனை வளர்த்து கொள்ளும் வகையில் ஜெர்மன் மொழி கற்பதற்கு மதுரை மாநராட்சி மற்றும் பிராட்மைண்ட் நிறுவனம் இணைந்து மாணவிகளுக்கு வாரந்தோறும் சனிக்கிழமை பயிற்சி அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது கடந்த (28.082025) மதுரை மாநகராட்சி வெள்ளிவீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிராட்மைண்ட் நிறுவனத்தின் சார்பில் ஜெர்மன் மொழி பயிற்சி வகுப்பினை மேயர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள். இப்பயிற்சியில் சுமார் 70 மாணவிகள் பயிற்சி பெற உள்ளனர். இப்பயிற்சி சனிக்கிழமை தோறும் காலை 10 மணி முதல் 1 மணி வரை நடத்தப்பட உள்ளது.

முன்னதாக மதுரை மாநகராட்சி பள்ளிகளில் 7 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் உடல்நலனை காக்கும் பொருட்டு வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 6 மணி வரையிலும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும் உடற்பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது. அதன்படி கடந்த (28.08.2025) மதுரை மாநகராட்சி நீச்சல் குளம் அருகில் உள்ள மாநகராட்சி உடற்பயிற்சி கூடத்தில் பள்ளி மாணவர்களுக்கு உடற்பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் சுமார் 40 மாணவர்கள் உடற்பயிற்சிகள் மேற்கொண்டனர்.


இந்நிகழ்வில் கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், கல்வி அலுவலர் ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், மாமன்ற உறுப்பினர்கள் முருகன், ஜென்னியம்மாள், பிராட்மைண்ட் நிறுவன இணை இயக்குநர் முரளி, தலைமை ஆசிரியர் அய்யர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இந்தியா அளித்த எச்சரிக்கையால் உயிர் தப்பிய 1.5 லட்சம் பாகிஸ்தானியர்

புதுடெல்லி, ஆக.30-

இந்தியாவின் முன்கூட்டியே அளித்த வெள்ள எச்சரிக்கையால் 1.5 லட்சம் பாகிஸ்தானியர்கள் உயிர் தப்பி உள்ளனர்.

காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானை நோக்கி பாயும் ராவி, சட்லெஜ், செனாப் ஆகிய ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் ஜம்மு காஷ்மீரில் உள்ள அணைகள் முழு கொள்ளளவை எட்டியதால் திறக்கப்பட்டுள்ளன. இதனால் கடும்



வெள்ளப்பெருக்கு ஏற்படும் என கடந்த திங்கள்கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன் கிழமை என தொடர்ந்து பாகிஸ்தான் அரசுக்கு இந்திய அரசு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்தது. இதன் அடிப்படையில், ஆற்றங்கரையோர கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1.5 லட்சம் பேர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். இதனால் அவர்கள் உயிர் தப்பி உள்ளனர்.

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், இந்திய அரசு மனிதாபிமான அடிப்படையில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்ததால் 1.5 லட்சம் பாகிஸ்தானியர்கள் உயிர் தப்பி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலும் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருவதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பசில்கா மாவட்டம் தேஜா ரோஹேலா கிராமத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டான். அவனைக் காப்பாற்ற முயன்ற மேலும் 3 பேர் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர். இதனிடையே, அவர்கள் வழியில் இருந்த யூகளிப்டஸ் மரங்களில் ஏறிக் கொண்டனர். இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் 4 பேரையும் பத்திரமாக மீட்டனர்.



## குடியாத்தம் பிச்சனூரில், விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு, புதிய நீதி கட்சியின் சார்பாக சிறப்பு பூஜைகள் மற்றும் மாபெரும் அன்னதான விழா

குடியாத்தம் ஆக30-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, பிச்சனூர் பேட்டை, தலையாரி முனிசாமி தெருவிலுள்ள பஞ்சமுக விநாயகர் கோவிலில் சிறப்பு அபிஷேகமும், விநாயகருக்கு எருக்கன் மற்றும் அருகம்புல் மாலை அணிவித்து, கொட்டை, கொழுக்கட்டை, இனிப்புகள் படையலிட்டு, சிறப்பு பூஜைகளுடன் மாபெரும் அன்னதான விழா கைத்தறி காவலனும், குடியாத்தம் நகரச் செயலாளருமான எஸ்.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஏ.சி.எஸ்.கல்வி குழும நிறுவனரும், புதிய நீதி கட்சியின் தலைவருமான, மக்கள் சேவகர் டாக்டர். ஏ.சி.சண்முகம் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், நகர பொறுப்பாளர்கள் வெங்கடேசன், சசிகுமார், கன்னியப்பன், நித்தியா, சுந்தர்ராஜ், கார்த்தி, சரத்குமார், வினோத்குமார் ஆகியோர் முன்னிலையிலும், இதில் சிறப்பு அழைப்பாளர்களாக புதிய நீதி கட்சியின் மண்டல செயலாளர் ப.சரவணன், மாவட்ட செயலாளர் பிரம்மாஸ் ஆர்.பி.செந்தில், திரு.வி.க சங்கத் தலைவர் ஆர்.வி.மூர்த்தி, நகர பாஜக தலைவர் ஜெகன் மற்றும் புதிய நீதி கட்சியின் பொறுப்பாளர்கள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் என பலர் கலந்து கொண்டு இந்த மாபெரும் அன்னதான விழாவை சிறப்பித்தனர்.

## மதுரை மற்றும் விருதுநகர் பெண்கள் கல்லூரியில் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது





விருதுநக, ஆக.30-

மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டகளின் மங்கையர்கரசி மற்றும் வே.வ.வன்னிய பெருமாள் பெண்கள் கல்லூரியில் வெற்றி நிச்சயம் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி திறன் மேம்பாட்டு பயிற்சியின் தலைவரும் தாம்பரம் மாநகர அயலக அணியின் அமைப்பாளருமான டி.ஆர்.சிவகுமார் Mphil LLB தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மாணவி திருஷ்ணா அனைவரையும் வரவேற்றார்

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட கலெக்டர் சுகபுத்ரா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குனர் கிராந்தி குமார், கல்லூரி செயலாளர் மதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இதில் மாணவிகள் ஒவ்வொருவரும் திறன்பட கற்று தொழில் முனைவோராக வேண்டும் என்றனர் இந்த நிகழ்ச்சியில், பிஹைவ் கம்யூனிகேஷன் கிளப் திறன் மேம்பாட்டு பயிற்சி தலைவர் சியாம் ராஜ், கல்லுரி முதல்வர் சிந்தனா பேசினார். இறுதியில் மாணவி நன்றி உரையாற்றினார்.



## கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா

காளையார் கோவில், ஆக.30-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் கொல்லங்குடி அரியாக்குறிச்சி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் கோவில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நடைபெற்றது.

கோவில் அறங்காவலர் குழுத்தலைவர், காளையார்கோவில் திமுக வடக்கு ஒன்றியக்கழக துணைச் செயலாளர் கண்டிப்பட்டி வி. சி. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் இந்துசமய அறநிலையத்துறை காளியம்மன் கோவில் செயல் அலுவலர் மாரிமுத்து, கோவில் அறங்காவ லர்கள் கண. சந்திரன்,ராணி சீனிவாசன், நாட்டரசன் கோட்டை திமுக பேரூர் க்கழக செயலாளர் ஜெய ராமன், காளையார்கோவில் தெற்கு ஒன்றியக்கழக துணைச் செயலாளர், தொழிலதிபர் கோலாந்தி கோதண்டபாணி, ஒன்றியக்குழுகண்ணன் உறுப்பினர், மாவட்டக்கழக பிரதிநிதி மேப்பல் அழகப்பன், சீனிவாசன், மாலைமலர் செய்தியாளர், மரக்காத்தூர் கண்ணன் உள்ளிட்ட கோவில் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.




■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர் என்.சுரேஷ் ராஜன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில், பொதுவிநியோக திட்ட வளர்ச்சி குறித்து மண்டல அளவில் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டனர்.

## குற்றாலத்தை உலக சுற்றுலா தளமாக தரம் உயர்த்த வேண்டும்: தென்காசியில் த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் பேட்டி



தென்காசி, ஆக.30-

தென்காசி மாவட்டத்தில் உள்ள குற்றாலம் அருவிகளில் ஆண்டு முழுவதும் தண்ணீர் விழும் வகையில் மலைப்பகுதியில் அணை கட்ட வேண்டும். என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

தென்காசி மத்திய மாவட்ட தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவரும் கடையநல்லூர் முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவருமான எஸ். ஆர்.அய்யாத்துரையின் உறவினரும், கடையநல்லூர் வட்டார த.மா.கா. விவசாய அணி தலைவருமான காசி தர்மம் ஆர்.முப்புடாதி என்ற துரை எம்.லெட்சுமி ஆகியோரின் மகன் எம்.வேல் முருகன், காசிமேஜர்புரம் கு. முத்துக்குமார், எம்.சரஸ்வதி ஆகியோரின் மகள் எம்.எஸ். முத்துலட்சுமி ஆகியோரின் திருமண விழா காசிதர்மம் சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்றது.

இந்த திருமண விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஜி.கே.வாசன் பத்திரிக்கையாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

"ராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் சோதனை கிணறுகள் அமைக்க அனுமதி வழங்கக் கூடாது. குற்றாலத்தை உலகளவில் சுற் நுலாத்தலமாக மேம்படுத்த வேண்டும். ஆண்டு முழுவதும் குற்றாலம் அருவிகளில் தண்ணீர் விழும் வகையில் சிறந்த பொறியாளர்களை கொண்டு நன்கு திட்டமிட்டு மலைப் பகுதியில் தடுப்பணை கட்ட வேண்டும். விருதுநகர் கொல் லம் மார்க்கத்தில் இரண்டு வழித்தட ரயில் பாதை அமைக்கப்பட வேண்டும். சுரண்டை இரட்டைக்குளம் பாசன கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

6 மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் சிவகிரி செண்பகவல்லி அணையை சீரமைக்க வேண்டும் வனவிலங்குகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து சேதம் விளைவிப்பதை கட்டுப்படுத்த வேண்டும். அதோடு வனவிலங்குகளால் மனிதர்களுக்கு பாதிப்பு ஏற்ப டாத வகையில் உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும். தமிழர் ஒருவரை துணை குடியரசுத் தலைவராக உயர்ந்த பதவியில் அமர்த்தி அழகு பார்க்க பாஜ கூட் டணி முயன்று வருகிறது. அமெரிக்கா 50 சதவீத வரி விதித்திருப்பது தொடர்பாக பிரதமர் மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளுக்கு அனைவ ரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். கச்சத் தீவை மீட்க வேண்டும் என்பதே தமாகாவின் நிலைப்பாடு. தமிழ்நாட்டில் வலுவாக உள்ள பாஜ அதிமுக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளது" என்றார்., பேட்டியின் போது தமிழ் மாநில காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் விடியல் சேகர், தென்காசி மத்திய மாவட்ட தமாகா தலைவர் எஸ்.ஆர்.அய்யாத்துரை, மேற்கு மாவட்டத் தலைவர் என்.டி.எஸ். சார்லஸ், விருதுநகர் ராஜபாண்டியன், சரவணன், தாஸ், காசிதர்மம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் தங்கம், இளைஞர் அணி தென் மண்டல செயலாளர் கார்த்திக், விவசாயஅணி முப்புடாதி, முருகன், பூமாரியப்பன், மக்தூம், கார்த்திக்துரை உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்: நெடுஞ்செழியன் தொடங்கி வைத்தார்

கல்லல், ஆக.30-


சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியம் அ. கருங்குளம், கீழப்பூங்குடி, மலைகண்டான் ஆகிய பகுதிகளை ஒன்றிணைத்து வெற்றியூரில் உங்களுடன் ஸ்டாலின் எனும் சிறப்பு முகாம் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வினை கல்லல் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் நா. நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், அரசு ஒப்பந்ததாரர் கோவிலூர் பரணிகிட்டு என்ற வெள்ளைச்சாமி, வட்டாட்சியர் ராஜா ,வட்டார வளர்ச்சி அலுவலர்கள், முகவை கருணாநிதி, கிளைக்கழக செயலாளர், அண்ணாமலை, உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் மற்றும் கிளைக்கழக திமுகவினர் கலந்து கொண்டனர்.

இதனிடையே கோரிக்கை மனு அளித்த பெண்களுக்கு உரிய சான்றிதழ்களை ஒன்றியக்கழக செயலாளர் நா. நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி பரணிகிட்டு, வட்டாட்சியர் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் வழங்கினர்...



■ மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சென்னகரம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பான செய்திகளை விளக்கும் சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்கின்றனர்.




■ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம்,பூவந்தி,கீழடி மடப்புரம், ஏனாதி ,நெல் முடிக்கரை கிராமங்களில் உங்களுடன் ஸ்டாலின் முகம் அண்மையில் நடைபெற்றது.கடந்த 21,22 ஆம் தேதியன்று பெறப்பட்ட மனுக்கள் வைகை ஆற்றில் மூட்டை மூட்டையாக கிடப்பதைக் கண்டு பொதுமக்கள் அதிர்ச்சியில் உள்ளனர். தகவல் அறிந்து வந்த அலுவலர்கள் மனுக்களை கைப்பற்றி கொண்டு சென்றனர்..




■ மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் உரப்பனூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் வருவாய் கோட்டாட்சியர் சிவஜோதி, வருவாய் வட்டாட்சியர் கிளமெண்ட் சுரேஷ் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரகலா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் குமரவேல்,ஊராட்சி செயலாளர்கள் உரப்பனூர் இளங்கோ, சித்தாலை கணேசன், சொரிக்காம்பட்டி கணேசன், புங்கன்குளம் நாகராஜன், கரடிக்கல் பாலமுருகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் யசோதை சாமிநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் மேற்கு ஊராட்சி ஒன்றியம் வயலூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றார். ஊராட்சிகளின் உதவி இயக்குனர் அரவிந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொற்செல்வி, பேராட்சி பிரேமா, வயலூர் ஊராட்சி செயலாளர் சக்திவேல், அரியூர் ஊராட்சி செயலாளர் நமதரசு, வைரவநத்தம்,சிறு வாலை ஊராட்சி செயலாளர் மஞ்சுளா மற்றும் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள நியாய விலை கடையை திறந்து வைத்தார்.

## சோழிங்கநல்லூர் , 199வது வட்டம்" அரசினர் மேல்நிலைப் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்"



சோழிங்கநல்லூர், ஆக.30-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி : இடம் : சென்னை மாநகராட்சி 15 மண்டலம், அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ராஜீவ் காந்தி சாலை, ஓ.எம்.ஆர்.ரோடு, ஆவின் அருகில், பகுதி 44, வார்டு 199,(ஆகஸ்ட் 29) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். 199 வது மாமன்ற உறுப்பினர், ஜி. சங்கர் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், எம் .எல்.ஏ,

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை வாங்கி துறை சார்ந்த அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் தன்னார்வலர்கள் மனுக்களை பூர்த்தி செய்து கொடுத்தனர் .முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மக்களுக்கு சான்றிதழை எம்.எல்.ஏ வழங்கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது...

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161